செ.வெ. எண்: 232 நாள்: 27.03.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (27.3.2012) தலைமைச் செயலகத்தில், புதியதாக கட்டப்பட்டுள்ள 7 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 5 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் 12 பொது விநியோகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம், திருப்பனந்தாள்; திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார்சத்திரம், பழனி, நத்தம்; நாமக்கல் மாவட்டம் – சேந்தமங்கலம்; திருவள்ளூர் மாவட்டம் – பூண்டி ஆகிய இடங்களில் 10 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக 7 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்;

நாகப்பட்டினம் மாவட்டம் – காரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – புத்தனாம்பட்டி; விருதுநகர் மாவட்டம் – ஆவுடையாபுரம், மேலக்கோட்டையூர், சிவகங்கை மாவட்டம் – பிரான்மலை ஆகிய இடங்களில் 71 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 5 பள்ளிக் கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – புதுப்பட்டினம், நென்மேலி; கோயம்புத்தூர் மாவட்டம் – சாலைவேம்பு, தென்பொன்முடி, தொப்பம்பட்டி, பரமடையூர்; நாகப்பட்டினம் மாவட்டம் – கீழக்காடு, கரூர் மாவட்டம் – குள்ளம்பட்டி, பாம்பன்பட்டி; பெரம்பலூர் மாவட்டம் – நல்லூர்; புதுக்கோட்டை மாவட்டம் – நெம்மக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டம் – வாராபூர் ஆகிய இடங்களில் 33 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 12 பொது விநியோகக் கட்டடங்கள், என மொத்தம் 24 கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வளர்ச்சிப் பணிகளை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர், உதவி இயக்குநர் (தணிக்கை), செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோருக்கு ஒரு கோடியே இருபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஓராயிரத்து நூற்றி முப்பத்தி எட்டு ரூபாய் மதிப்பில் 25 பொலீரோ வாகனங்களும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக 54 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 10 பொலீரோ வாகனங்களும் வாங்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 வாகனங்களுக்கான சாவிகளை இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஓட்டுநர்களிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், 8 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் 10 மாவட்டங்களில் புது வாழ்வு திட்ட தகவல் தொடர்பு செயல்பாட்டிற்காக புது வாழ்வு ரதத்தினை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.
நாள்: 27.3.2012